| | | | |
|---|---|---|---|
| **Headline** | Foreigners don't understand English spoken by Singaporeans | | |
| **Date** | 3 July 2003 | | |
| **Media Title** | Tamil Murasu | **Section** | Singapore |
| **Page No** | 2 | **Size** | 4colx8.5cm |

# சிங்கப்பூரர் பேசும் ஆங்கிலம் வெளிநாட்டினருக்குப் புரியவில்லை

சிங்கப்பூரில் வேலை செய்ய வரும் ஆங்கிலம் பேசும் வெளிநாட்டினர் பலருக்கு சிங்கப்பூரர்கள் பேசும் ஆங்கிலத்தைப் புரிந்துகொள்வது சிரமமாக இருக்கிறது.

இதனால்தான், சிங்கப்பூருக்கு வரும் வெளிநாட்டினருக்கான இணையப்பக்கத்தில், "சிங்கப்பூர் ஆங்கிலத்தை" விளக்கும் ஒரு பகுதி இருக்கிறதாம்.

சிங்கப்பூருக்கு வரும் வெளிநாட்டினர்கள் நம்மைப் புரிந்துகொள்ள ஒரு வழிகாட்டித் தேவைப்பட்டால், உலக மக்கள் நம்மைப் புரிந்துகொள்வது எப்படி என்ற கேள்வியை எழுப்பினார் தகவல், தொடர்பு, கலைகள் அமைச்சர் டாக்டர் லீ பூன் யாங். "நல்ல ஆங்கிலம் பேசுவோம் இயக்கத்தை நேற்று உட்லண்ட்ஸ் வட்டார நூலகத்தில் தொடங்கி வைத்து அவர் பேசினார்.

சிங்கப்பூரர்களில் பலர் ஏற்கனவே ஆங்கிலம் பேசுகிறார்கள். ஆனால், உலகெங்கிலும் ஆங்கிலம் பேசும் அனைவருக்கும் புரியும் வகையில் எளிமையாகவும் தெளிவாகவும் ஆங்கிலம் பேசத் தூண்டுவதே இயக்கத்தின் நோக்கம் என்று டாக்டர் லீ விளக்கினார்.

பள்ளிகளில் கற்றுக்கொண்டபடி, முறையாகவும் இலக்கணமாகவும் ஆங்கிலம் பேசுவதற்குப் பெரும் முயற்சி தேவைப்படாது என்றார் அவர். அனைவரும் ஒத்துழைப்பது முக்கியம்.